[25th February 1969

இவ்விழா நடைபெறவேண்டியதில்லை என அவர் கருதினார். இந்த முடிவிற்கு வருமுன்னர் மாணவர் சமுதாயத்தின் அடர்ந்த உணர்ச்சி வேகமும் கருத்தில் கொள்ளப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இங்கிருந்து அனுப்பியபடியே டில்லியில் அச்சடித்து அனுப்பினார்களா, அல்லது இங்கிருந்து அனுப்பியதற்கு மாறாக அச்சடித்து அனுப்பினார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்போது அன்றைய முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். இருதரப்பிலும் உள்ள இலாகாக்களில் தவறு ஏற்பட்டிருக்கிறது என்று அப்போதே சொல்லியிருக்கிறார்கள்.

திரு. எம். எத்திராஜுலு : இந்தத் தவறு நேர்ந்ததற்கு இந்த அரசில் இருக்கும் ஒரு உத்தியோகஸ்தர்தான் காரணம் என்றும் அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அன்றைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருந்தார்கள். அப்படியானால் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? மற்றொன்று, அது சம்பந்தப்பட்ட பைல்கள் காணப்படவில்லை என்று சொல்கிறார்களே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்போது முதலமைச்சர் அவர்கள் சொன்னது அதையெல்லாம் விசாரித்துக் கொண்டிருக்கிறோம். பெரிய காரியம் நடந்துவிட்டது என்று கிளரிக்கொண்டிருக்கவேண்டாம். அது பெரிய காரியமல்ல. தவறு நேர்ந்தது தெரிந்து நிறுத்தப்பட்டது. அதற்காக விளக்கம் அளிக்கப்பட்டது என்று அன்றைய தினம் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

Printing of Electoral Rolls

* 38 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the electoral rolls are printed even in private presses besides the State Government Press; and

(*b*) if the rolls are printed in private presses, the method adopted for selecting such presses?

வாக்காளர் பட்டியலை அச்சிடல்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வாக்காளர்கள் பட்டியல் தமிழக அரசு அச்சுக்கூடந் தவிர தனியார் அச்சகங்களிலும் அச்சிடப்படுகிறதா ?

(இ) தனியார் அச்சகங்களில் அச்சிடப்பட்டால் எம்முறையில் அச்சகங்கள் அச்சிடுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?

25th February 1969]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) வாக்காளர் பட்டியலைக் குறிப்பிட்ட காலத்திற்குள் அச்சிட்டுக் கொடுப்பதில் அச்சகத்தினரின் திறமையைப் பொறுத்து, அச்சகத்தினரின் தேர்வினையும் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டிய பணியின் அளவினையும் அரசாங்கம் முடிவு செய்து வருகிறது. இதனை மாவட்ட ஆட்சியாளர்கள், சென்னை மாநகராட்சிப் பொறுப்பாளர் (Commissioner) ஆகியோரைக் கலந்து அரசாங்கம் முடிவு செய்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இவைகளுக்கு டெண்டர் கேட்கப்படுகிறதா? யாரேனும் குறைவாக டெண்டர் கொடுத்தால் அந்த அச்சகத்தாருடைய கோரிக்கை கவனிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 40, 50க்கு மேற்பட்ட அச்சகங்களில் அச்சடிக்கப்படுகின்றன. ஆங்காங்கு எந்த அளவிற்கு அச்சகத்திற்கான கூலி நிர்ணயிக்கப்படுகிறதோ இதே அளவுக்கு எல்லா இடங்களிலும் அச்சடிக்கப்படுகின்றன.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த வாக்காளர் பட்டியல் அடிப்பதில் தவறாக அச்சடிக்கப்படுகின்றன. பெயர்களில், ஜாதிகளில் மாறுதல்கள் இருக்கின்றன. இப்படி வழக்கமாக தவறு செய்யும் அச்சகங்களுக்கு மீண்டும் கொடுக்கப்படுகிறதா? கொடுக்காமல் நிறுத்தப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : வாடிக்கையாகத் தவறு செய்துகொண்டிருந்தால் அந்த அச்சகத்திற்குக் கொடுப்பது நிறுத்தப்படும்.

திரு. எம். எத்திராஜுலு : மாவட்ட அச்சகங்களுக்கு வேலை கொடுப்பதற்கு முன்பு மாவட்ட கலெக்டரின் அனுமதி பெற்று கொடுக்கப்படுகிறதா? அல்லது நேரடியாக சர்க்காரே கொடுக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாவட்டத் தலைவர்களைக் கலந்து அந்தத் தேர்வு செய்யப்படுகிறது.

Encroachment on riverside porambokes

* 39 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether Left Communists have encroached upon river-side poramboke lands in Kozhumam village and other areas of Udumalpet, Coimbatore district ;

(*b*) whether the villagers have made any complaint to the Hon. the Chief Minister; and

(*c*) if so, the action taken thereon?